செப்டம்பர் 23-29

**பாடம் 14**

# சிலுவையைக் குறித்து மேன்மைபாராட்டுதல்

**மனன வசனம்**

**நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மைபாராட்டா திருப்பேனாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண் டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறை யுண்டிருக்கிறேன். கலா 6:14.**

**ஆராய்ச்சிக்கு**

**கலா 6:11-18; ரோமர் 6:1-6; ரோமர் 12:1-8; 2கொரி 4:10; 2கொரி 5:17; 2கொரி 11:23-29.**

செப்டம்பர் 23 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.



கலாத்தியரைத் தீவிரமாகப் படித்தோம்; அந்நிரு பத்தின் செய்தி தீவிரமாக இருப்பதுதான் அதற்குக் கார ணம். பவுல் தன் அழைப்பை அறிந்திருந்தார்; தான் பிர சங்கித்த சத்தியத்தை அறிந்திருந்தார்; அந்தச் சத்தியம் ஆண்டவரிடமிருந்து வந்ததென அநேக இடங்களில் சொல்லியிருக்கிறார்; பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசி களின் வைராக்கிய வாஞ்சையோடு ஏசாயாபோல், எரேமியாபோல், ஓசியாபோல் எழுதுகிறார். தங்கள் காலத்திலிருந்த தேவ ஜனங்கள் தீமையிலிருந்து மனந் திரும்பும்படி இவர்கள் வேண்டிக்கொண்டதுபோல, பவுலும் தன் காலத்து மக்களிடம் வேண்டிக்கொள்கிறார்.

சூழ்நிலை வேறுபடலாம். ஆனால், எரேமியாவின் காலத்தில் இருந்தவர்களுக்கு அவர் வார்த்தை பொருத்த மாய் இருந்ததுபோல, கலாத்தியருக்கும் எரேமியாவின் வார்த்தைகள் பொருத்தமாகவே இருக்கின்றன. ‘ஞானி தன் ஞானத்தைக் குறித்து மேன்மை பாராட்டவேண்டாம்; பராக்கிரமன் தன் பராக்கிரமத் தைக்குறித்து மேன்மை பாரட்டவேண்டாம்; ஐசுவரியவான் தன் ஐசுவரியத்தைக் குறித்து மேன்மை பாராட்டவேண்டாம். மேன்மை பாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும் நியாயத்தை யும் நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக் குறித்தே மேன்மைபாராட் டக்கடவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; இவைகளின் மேல் பிரியமாயிருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லு கிறார். எரேமியா 9:23,24.

மனிதனின் ‘மகிமையான’ ஞானமும், ஐசுவரியங் களும், பெலனும் கிறிஸ்துவின் சிலுவைக்குமுன் முற்றி லும் வீணும் மாயையுமாக இருக்கும். வழிதப்பிப்போன தன் மந்தைகளுக்கு பவுல் எழுதிய நிருபத்தின் மையமும் இதுதான்.

*2017, செப்டம்பர் 30 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

## பவுலின் சொந்தக் கையெழுத்து

**கலா 6:11-18 இல் பவுலின் முடிவுரையையும் அவருடைய பிற நிருபங்களின் முடிவுரையையும் ஒப்பிடுங்கள். ஒற்றுமை-வேற்றுமை என்ன? ரோமர், 1கொரி, 2 கொரி, எபே, பிலி, கொலோ, 1தெசலோனிக்கேயர், 2தெசலோனிக்கேயர் புத்தகங்களின் முடிவுரையைப் பாருங்கள்.**

---

பவுலின் முடிவுரைகள் எல்லா நிருபங்களிலும் ஒன்றுபோல் இல்லை. ஆனால், அவற்றில் பொதுவான விஷயங்கள் பல உள்ளன:

1. தனிநபர்களுக்கு வாழ்த்துதல்
2. இறுதி அறிவுரை
3. பவுலின் கையொப்பம்
4. இறுதி ஆசீர்வாத வாழ்த்து

***வழக்கமான இந்த விஷயங்களையும் கலாத்தியரில் காணப்படும் முடிவுரையையும் ஒப்பிட்டால், இரண்டு முக்கிய வித்தியாசங்களைக் காணலாம். முதலாவது, மற்ற நிருபங்களில் உள்ளது போல் கலாத்தியரில் தனிப்பட்ட வாழ்த்துகள் எதுவும் இல்லை. காரணம் என்ன?***

---

பவுலுடைய நிருபங்களின் முகவுரையில் காணப்படும் நன்றியுரை கலாத்தியரில் இல்லாததால், பவுலுக்கும் கலாத்தியருக்கும் இடையே விரிசல் ஏற்பட்டிருந்ததற்கு மற்றுமோர் ஆதாரமாக அது இருக்கிறது. பவுல் மரியாதைதெரிந்தவர்; ஆனால், கண்டிப்பானவரும்கூட.

தான் எழுதவேண்டியதை எழுத்தர் ஒருவரிடம் வாய்மொழியாகச் சொல்வது பவுலின் வழக்கம். ரோமர் 16:22. எல்லாம் எழுதப்பட்டபின், நிருபத்தை நிறைவு செய்ய சுருக்கமாக சில வார்த்தைகள் எழுதுவார். 1 கொரி 16:21. கலாத்தியருக்கு எழுதின நிருபத்தை நிறைவுசெய்ய எழுதுகோலை எடுத்தவர் கலாத்தியாவின் சூழ்நிலை இன்னும் அவர் மனதை வருத்திக்கொண்டிருந்ததால் அதிகம் எழுதிவிடுகிறார். மூடத்தனமான வழிகளிலிருந்து திரும்பும்படி மீண்டுமொருமுறை கலாத்தியரை எச்சரித்துவிட்டுத்தான் எழுதுகோலை வைக்கிறார்.

நிருபத்தைப் பெரிய எழுத்துகளில் எழுதினதாக கிரேக்க மொழியில் கலா 6:11 கூறுகிறது. எழுத்துக்கள் ஒரே சீராக இல்லாததைத்தான் பவுல் அவ்வாறு குறிப்பிடுவதாக சிலர் ஊகிக்கிறார்கள். ‘உபத்திரவத்தால், கூடாரவேலை செய்ததால் கரங்கள் மரத்துப்போயிருக்கலாம். அதனால்தான் ஒழுங்காக எழுதமுடியாமல் இருந்திருக்கலாம்’ என்று கூறுகிறார்கள். அவருக்குக் கண்பார்வை கோளாறு இருந்ததை இது ஊர்ஜிதப்படுத்துவதாக வேறுசிலர் கூறுகிறார்கள். இரண்டிலும் உண்மை இருக்கலாம். ஆனால், தன் கருத்தை வலியுறுத்துவதற்கு அவர் பெரிய எழுத்துகளாக எழுதியிருக்கலாம் என்பதுதான் சரியான காரணமாக இருக்கும். நாமும்கூட ஒரு முக்கிய கருத்தை வலியுறுத்துவதற்கு அடிக்கோடிட்டுக் காட்டுகிறோம் அல்லவா? அல்லது, கொட்டை எழுத்துகளில் எழுதுவோம்.

---

காரணம் எதுவாயிருந்தாலும், வாசகர்கள் தன் எச்சரிப்புக்கும் புத்திமதிகளுக்கும் செவிகொடுப்பதை பவுல் விரும்பினாரென்பது உண்மை.

*கலா 6:12,13 வசனங்களில் பவுல் சொல்வது என்ன?*

தன் எதிரிகளின் திட்டம் என்னவென்று முன்பு மறைமுகமாகக் குறிப்பிட்டிருந்தார் பவுல். கலா 1:7; 4:17. ஆனால், கலா 6:12,13 வசனங்களில் முதன்முதலாக அதை வெளிப்படையாகக் கூறுகிறார். 'மாம்சத்தின்படி நல்வேஷமாய்க் காணப்பட' அவர்கள் விரும்புவதாகக் கூறுகிறார். 'நல்வேஷம்' என்பதற்கான கிரேக்க வார்த்தைக்கு 'நல்லமுகம்' என்று அர்த்தம். 'முகம்', 'வேஷம்போடுதல்' இரண்டுக்கும் ஒரே கிரேக்க வார்த்தைதான். நடிகர்களின் நடிப்பைச் சுட்டிக்காட்டவும் இந்த வார்த்தை உருவகமாகப் பயன்படுகிறது. அதாவது, பார்வையாளர்களின் அங்கீகாரத்தைப் பெறவிரும்பும் நடிகர்கள் போன்று இவர்கள் இருப்பதாக பவுல் கூறுகிறார். மரியாதைக்கும் அவமரியாதைக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படும் ஒரு கலாச்சாரத்தில் மக்களில் அனுசரணையைப் பெறுவது முக்கியம். பொய்ப் போதகர்கள், கலாத்தியாவிலிருந்த யூதர்கள்மத்தியிலும் எருசலேமிலிருந்த பிற யூதக் கிறிஸ்தவர்கள்மத்தியிலும் தங்கள் மரியாதையை அதிகரிக்க நினைத்தார்கள்.

'துன்பப்படாமல்' தப்பவிரும்பினது அவர்கள் நோக்கங்களில் ஒன்றென்று பவுல் கூறுகிறார். உபத்திரவம் எனும்போது, உடலளவில் கொடுக்கப்படும் துன்பம்தான் நினைவுக்கு வரும். ஆனால், 'மனதைக் காயப்படுத்தல்', 'விலக்கிவைத்தல்' போன்றவையும் கொடுமையானவையே. பவுலும் யூதேயாவிலிருந்த மதத் தீவிரவாதிகளும் ஒரு சமயத்தில் முதல்வகை உபத்திரவத்தைக் கொடுத்து வந்தார்கள். கலா 1:13. இரண்டாம் வகை உபத்திரவங்களும் கிறிஸ்தவர்களுக்கு ஏற்படத்தான் செய்தன.

யூத மதத்தலைவர்கள் பலருக்கு அநேக இடங்களில் அரசியல் செல்வாக்கு இருந்தது. எனவே, இவர்களோடு நல்ல உறவை வைத்துக்கொள்ள யூதவிசுவாசிகள் விரும்பினார்கள். விருத்தசேதனம்பண்ணி, நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்கிறவர்களாக புறஜாதியாரை மாற்றிவிட்டால் யூதர்களோடு நல்லிணக்கம் ஏற்படுத்த கலாத்தியாவிலிருந்த பொய்யர்களுக்கு வாய்ப்பிருந்தது. அதுபோக எருசலேமிருந்த யூத விசுவாசிகளோடும் உறவு பெலப்படும். ஏனெனில், கலாத்தியாவில் புறஜாதியார்மத்தியில் நடைபெறும் ஊழியம்குறித்து எருசலேமின் விசுவாசிகளுக்குச் சந்தேகம் எழுந்திருந்தது. அப் 21:20,21. எனவே, இப்படி நடந்துகொள்வதால் யூதரோடு இணக்கமாகும் வாய்ப்பு இருந்தது. 'அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்' என்று திட்டமாய் அறிந்திருந்தார் பவுல். 2 தீமோ 3:12.

இந்தக் கள்வர்கள் ஏன் பொய்களைப் போதித்தார்கள்? ஒருவிதத்தில் அவை சரியாகத் தோன்றலாம். ஆனால், நாம் கவனமாக இல்லாவிட்டால், 'சிறந்த' நோக்கங்கள்கூட நம்மை வழிவிலக்கக்கூடுமென்பதுபற்றி இதிலிருந்து தெரிவது என்ன? சரியான நோக்கங்களுக்காகத் தவறான காரியங்களைச் செய்யும்படி சமீபத்தில் உங்களுக்கு ஏற்பட்ட அனுபவம் என்ன?

செவ்வாய்
செப்டம்பர் 26

## சிலுவையைக் குறித்து மேன்மை (கலா 6:14)

*நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தே யல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக; அவ ரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன். கலா 6:14.*

நற்செய்தியானது இரண்டு கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டி ருப்பதாகக் கூறுகிறார் பவுல்.

1 சிலுவையை மையப்படுத்துதல். வச 14.

2 நீதிமானாக்கப்படுதல். வச 15.

இதில் முதல் கோட்பாடுபற்றி இன்று பார்ப்போம். சிலுவையைப் பற்றி கலா 6:14 இல் பவுல் முதலில் கூறினபோது, அது எவ்வளவு திகைப்பை ஏற்படுத்தி யிருக்குமென, இருபத்தோராம் நூற்றாண்டில் வாழும் நாம் அறிந்துகொள்வது சற் றுக் கடினம். கிறிஸ்துவின் சிலுவை இன்று அநேகர் ஏற்றுக்கொண்டுள்ள சின்ன மாக விளங்குகிறது. ஆனால், பவுலின் நாட்களில் மக்கள் அதை வெறுத்தார்கள். எனவேதான், மேசியா சிலுவையில் அறையப்படுவாரெனும் கருத்து யூதருக்குக் கசப்பாயிருந்தது. ரோமப் பிரஜைகளைச் சிலுவையில் அறையமாட்டார்கள்.

ஒருவனைச் சிலுவையில் அறைவதுபோல் இரண்டாம் நூற்றாண்டில் ஓர் ஓவியம் வரையப்பட்டுள்ளது. அதில் அவனுக்குக் கழுதைத் தலை உள்ளதுபோல் சித்தரிக்கப்பட்டுள்ளது. இன்னொரு ஓவியத்தில், சிலுவையில் அறையப்படும் ஒருவன் கரங்களை உயர்த்தியிருக்கிறான். அந்தச் சிலுவைக்குக் கீழே, "அலெக் ஸாண்டர் தேவனை ஆராதிக்கிறான்" எனும் வார்த்தைகள் வரையப்பட்டிருக்கின் றன. கிறிஸ்துவின் சிலுவை ஏளனமாகக் கருதப்பட்டதென்பது இதிலிருந்து தெரி கிறது. இந்தச் சூழ்நிலையில்தான், கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்து மேன்மை பாராட்டுகிறா பவுல்.

**பவுல் பிற மனிதர்களைப் பார்த்தவிதத்தில், கிறிஸ்துவின் சிலுவை ஏற்படுத்திய மாற்றம் என்ன? கலா 6:14; ரோமர் 6:1-6; 12:1-8; பிலி 3:8.**

கிறிஸ்துவின் சிலுவை ஒரு விசுவாசியினுள் ஏராளமான மாற்றங்களை ஏற் படுத்துகிறது. நம்மை நாம் மதிப்பிடவும், பிறமனிதர்களை நாம் நடத்தவேண்டிய விதத்தையும் அது நமக்குக் கற்றுத்தருகிறது. இன்றைய உலகில் காணப்படும் தீமையும் அதை சார்ந்தவைகளும் தேவனுக்கு எதிரானவையாக இருக்கின்றன. 1யோவான் 2:16. நாம் கிறிஸ்துவோடு மரித்திருப்பதால், நம்மை அடிமைப்படுத்தி வந்த இவ்வுலகத்தின் வல்லமை இனியும் நம்மைக் கட்டுப்படுத்தமுடியாது; இவ் வுலகத்தில் நாம் வாழ்ந்து வந்த பழைய வாழ்க்கையும் இனி இல்லாமற்போகிறது. பவுல் சொல்வதுபோல், விசுவாசிக்கும் உலகத்திற்கும் இடையேயான பந்தம் அறு வதால், இருவரும் ஒருவருக்கு ஒருவர் மரிப்பது உண்மையாகிறது.

உலகத்தோடு உங்களுக்குள்ள உறவில் சிலுவை செய்த மாற்றம் என்ன? முன்பு நீங்கள் வாழ்ந்த வாழ்க்கைக்கும் உங்களுக்காக மரித்த உங்கள் ஆண்டவருக்காக இப்போது நீங்கள் வாழ்கிற வாழ்க்கைக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

கிறிஸ்துவின் சிலுவை எவ்வளவு மையமானது என்பதை வலியுறுத்திவிட்டு, நற்செய்தியின் இரண்டாம் அடிப்படைக் கோட்பாடான விசுவாசத்தால் நீதிமானாகுதல்பற்றியும் பவுல் கூறுகிறார். விருத்தசேதனத்திற்கு எதிராக அநேகந்தரம் அவர் கடுமையாகப் பேசியிருக்கிறார். கலா 5:2-4. ஆனால், விருத்தசேதனம் பண்ணுதலைவிட விருத்தசேதனம்பண்ணாததுதான் தேவனுக்குப் பிரியம் எனும் முடிவுக்குக் கலாத்தியர் வருவதையும் பவுல் விரும்பவில்லை. ஏனெனில், ஒருவர் என்ன செய்கிறாரென்பதுமட்டுமல்ல; ஒருவர் செய்யாத சில காரியங்கள்கூட கிரியைத்துவமாகிவிட வாய்ப்பிருக்கிறது. ஆவிக்குரியவிதத்தில் பார்த்தால், விருத்தசேதனம்பற்றிய பிரச்சனை எழும்பத் தேவையே இல்லை. மெய்ப்பக்தியானது வெளிப்படையான நடத்தையைச் சார்ந்ததல்ல; அது மனிதனுடைய இருதயத்தின் நிலையைச் சார்ந்தது. வெளிப்புறப் பார்வைக்கு ஒருவன் அருமையாகத் தோன்றினாலும், உட்புறத்தில் ஆவிக்குரிய ரீதியில் அவன் அலங்கோலமாய் இருக்க வாய்ப்புள்ளதென இயேசுதாமே கூறினார். மத் 23:27.

**புதுச் சிருஷ்டியாக மாறுவதென்றால் என்ன? கலா 6:15, 2கொரி 5:17. இதை நீங்கள் எவ்வாறு அனுபவித்திருக்கிறீர்கள்?**

---

'சிருஷ்டி' என்பதற்கான கிரேக்க வார்த்தை '**க்டீஸிஸ்**'. அது தனிப்பட்ட ஒரு 'சிருஷ்டியை' (எபி 4:13) அல்லது 'சகல சிருஷ்டிகளை' (ரோமர் 8:22) சுட்டிக்காட்டுகிற வார்த்தை. ஒரு சிருஷ்டிகரின் கரங்களிலிருந்து வருவதைத்தான் இரண்டுமே தெரிவிக்கின்றன. அதுதான் பவுல் வலியுத்துகிற கருத்து. 'புதுச் சிருஷ்டியாக' மாறுவது எந்தவொரு மனிதமுயற்சியாலும் கூடாத காரியம். அது விருத்தசேதனமாகவோ, வேறு எதுவாகவோ இருக்கலாம். படிப்படியாக நிகழும் இந்த மாற்றத்தைத்தான், 'மறுபடியும் பிறத்தல்' என்றார் இயேசு. யோவான் 3:5-8. ஆவிக்குரிய புத்துயிரை ஊட்டுகிற தெய்வீகச் செயல் இது. இதுவும் இரட்சிப்பின் செயலைச் சுட்டிக்காட்டும் ஓர் உருவகம்தான். இதைத்தான் பவுல், "விசுவாசத்தால் நீதிமானாக்கப்படுதல்" என்கிறார்.

புதுச்சிருஷ்டியின் இந்த அனுபவத்தை 2 கொரி 5:17 இல் விலாவாரியாகப் பேசுகிறார் பவுல். "புதுச்சிருஷ்டியாதல் என்பது பரலோகப் புத்தகங்களில் நம் பெயர் எழுதப்படுவது மாத்திரமல்ல, இன்று நாம் வாழ்கிற வாழ்வில் ஏற்படும் ஒரு மாற்றமும் ஆகும்" என்று பவுல் இவ்வசனத்தில் விளக்குகிறார். இதில் "நம் மனமாற்றத்தோடு சம்மந்தப்படும் அனைத்து நடவடிக்கைகளும் அடங்கும். அதாவது, ஆவியானவர் செய்கிற மறுபிறப்பின் கிரியை நம்மை மனமாற்றத்துக்கும் விசுவாசத்துக்கும் வழிநடத்துகிறது; அதன்பிறகு அனுதினமும் நாம் மாம்சத்திற்கு மரிப்பதும் நாம் புத்துயிரடைவதும் நிகழ்கிறது; இறுதியாக நாம் கிறிஸ்துவின் சாயலைப் பெறுமட்டும் பரிசுத்தத்தில் தொடர்ந்து வளருகிறோம்." - *Galatians, p. 438.*

---

புதுச் சிருஷ்டியாக மாறுதல் நம்மை நீதிமானாக்குவதில்லை. இந்த முழுதளவு மாற்றமானது, நாம் ஏற்கனவே, நீதிமானாக்கப்பட்டதின் வெளிப்பாடு. அது எப்படி?

## முடிவுரைக் குறிப்புகள் (கலா 6:16–18)

***‘இந்தப் பிரமாணத்தின்படி நடத்துவருகிறவர்களுக்கு’ ஆசீர்வாதம் வழங்குகிறார் பவுல். கலா 6:16. அது என்ன ‘பிரமாணம்’? வசனத்தின் சூழ்நிலையை மனதில் வைத்துப் பதிலளியுங்கள்.***

---

‘பிரமாணம்’ என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் கிரேக்க வார்த்தையானது தச்சர்கள் பயன்படுத்தும் நேர்மட்டத்தைச் சுட்டிக்காட்டுவதாகும். ஒரு பொருளின் தரத்தை மதிப்பிடுவதற்கு உதவும் தரக்கோல் என்பதற்கான உருவக வார்த்தையாக இது மாறியுள்ளது. உதாரணமாக, புதிய ஏற்பாட்டு விதிகள் எனும்போது புதிய ஏற்பாட்டிலுள்ள இருபத்தேழு புத்தகங்களும் அடங்கும். சபையின் நம்பிக்கையையும் நடவடிக்கைகளையும் தீர்மானிக்கிற அதிகாரப்பூர்வ ஆதாரங்களாக அந்தப் புத்தகங்கள் கருதப்படுகின்றன. ஆகவே, இந்தப் புத்தகங்களில் காணப்படுகிற போதனைக்கு ஒத்ததாக ஒரு போதனை இல்லாதிருந்தால், அதை ஏற்றுக்கொள்ளக்கூடாது.

***பவுல் தன் சரீரத்தில் தரித்துக்கொண்டிருந்த ‘அச்சடையாளங்கள்’ யாவை? அவற்றின்நிமித்தம் ஒருவனும் தனக்கு ‘வருத்தம்’ உண்டாக்க வேண்டாமென்று ஏன் கூறுகிறார்? இந்தக் கேள்விக்கு கலா 6:14 இல் பதில் உள்ளதா? கலா 6:17; 2 கொரி 4:10; 11:23-29.***

---

‘அடையாளம்’ என்பதற்கான கிரேக்க வார்த்தை ‘**ஸ்டிக்மட்டா**’. இதிலிருந்துதான் ‘குறியீடு’ எனும் அர்த்தமுடைய ‘ஸ்டிக்மா’ எனும் ஆங்கில வார்த்தை உருவானது. எஜமான்கள் தங்களுக்குரிய அடையாளங்களை அடிமைகள்மேல் குறியிடுவது வழக்கமாக இருந்தது. சில மதங்களில், பக்தர்கள் தங்கள் உடலில் சில குறியீடுகளைப்போட்டுக்கொள்வார்கள். இதை மனதில் வைத்து பவுல் அவ்வாறு சொல்லியிருக்கலாம். உபத்திரவத்தாலும் இக்கட்டாலும் தன் சரீரத்தில் ஏற்பட்டிருந்த தழும்புகளையே ‘கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்கள்’ என்று பவுல் குறிப்பிட்டிருக்கவேண்டும். 2கொரி 4:10; 11:24-27. யூத மார்க்கத்திற்குத் தாங்கள் கீழ்ப்பட்டிருப்பதின் அடையாளமாக விசுவாசிகளான புறஜாதியார் விருத்தசேதன அச்சடையாளங்களைப் பெற்றிருக்கவேண்டுமென அவருடைய எதிரிகள் இப்போது வற்புறுத்தினார்கள். ஆனால், பவுலோ தான் யாருக்கு அடிமை என்பதின் அடையாளங்களைப் பெற்றிருந்தார். கிறிஸ்துவைத்தவிர வேறு எதன் மீதும் அவர் பற்றுவைக்கவில்லை. தன் எஜமானின் சேவையில் பவுல் தன் எதிரிகளால் பெற்றிருந்த தழும்புகள்தாம் கிறிஸ்துவில் அவர் வைத்திருந்த அர்ப்பணிப்பைப்பற்றி அதிக மாகப் பேசின.’’ - எலன் ஒய்ட், *6 SDABC, p. 989.*

இயேசுவை விசுவாசித்ததின்நிமித்தம் உடலில், அல்லது வேறெதிலாகிலும் நீங்கள் பெற்றிருக்கும் அடையாளங்கள் யாவை? அதாவது, உங்கள் விசுவாசத்திற்கு நீங்கள் கொடுத்த விலை என்ன?

---

“பூலோக வல்லமையையும் நரக வல்லமையையும் கல்வாரிச் சிலுவை எதிர்க்கிறது; இறுதியில் தோற்கடிக்கவும் போகிறது. சகல நற்சக்திகளுக்கும் மையம் சிலுவைதான்; அதிலிருந்துதான் நல்ல தாக்கங்கள் புறப்படுகின்றன. மக்களைக் கவர்ந்திழுக்கும் இடம் அது; ஏனெனில், அதன்மேல்தான் மனித இனத்திற்காக கிறிஸ்து தம் ஜீவனை விட்டார். தான் முன்பு பெற்றிருந்த பூரணத்தை மனிதன் மீண்டும் பெறும்படி, அவர் அந்தத் தியாகத்தைச் செய்தார். ஆம், அவன் குணம் முற்றிலும் மாறவும், ஜெயம்பெற்றவனாய் விளங்கவும் அவர் அந்தத் தியாகத்தைச் செய்தார். தேவனுக்கும் மனிதனுக்கும் மாபெரும் சத்துருவானவனை கிறிஸ்துவின் பெலத்தினால் மேற்கொள்ளுகிறவர்கள், விழுந்துபோகாத தூதர்களுக்கும் மேலான இடத்தைப் பரலோக மன்றங்களில் பெறுவார்கள்.

‘உலகத்திலிருந்து நான் உயர்த்தப்பட்டிருக்கும்போது, சகல மனிதரையும் என்னிடம் இழுத்துக்கொள்ளுவேன்’ என்று கிறிஸ்து சொல்லுகிறார். சூழ்நிலை சாதகமாக இல்லாத நேரங்களில், சாதகமான சூழ்நிலையை உருவாக்குகிறது சிலுவை. ஒவ்வொரு தலைமுறையிலும், சத்தியம் அந்தந்தக் காலத்தின் சத்தியம்போலவே வெளிப்படுத்தப்படுகிறது. சிலுவையின் மேலுள்ள கிறிஸ்துவை மையமாகக் கொண்டுதான், கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கின்றன; நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தமிடுகின்றன. உலகத்தை அசைக்கும் வழி இதுவே” – *EGW, 6SDABC, p. 1113.*

## கலந்துரையாடக் கேள்விகள்

1. *பவுல் தன் நிருபங்களைத் துவங்கும்போதும், முடிக்கும்போதும் தேவ கிருபையைக் குறிப்பிடுவதின் முக்கியத்துவம் என்ன? கலா 1:3; 6:18.*
2. *‘உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன்’ என்கிறார் பவுல். கலா 6:14. அப்படியானால், கிறிஸ்தவர்கள் உலகத்திற்கு மரித்திருக்கும் நிலையில், சுற்றுச்சூழல், இனவேறுபாடு, கருக்கலைப்பு போன்ற பிரச்சனைகளை எவ்வாறு அணுகவேண்டும்?*
2. *பவுல் சொல்லும் ‘புதுச் சிருஷ்டியின்’ அனுபவத்தை ஒருவர் பெற்றிருப்பதை அந்த நபர் எவ்வாறு அறிந்துகொள்ளலாம்?*
2. *நியாயப்பிரமாணம், நியாயப்பிரமாணத்தின் கிரியைகள், விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல், புதிய-பழைய உடன்படிக்கைகள், கிறிஸ்துவின் கிரியை, கிறிஸ்தவ வாழ்வின் தன்மை ஆகியனபற்றி பவுல் சொல்லும் கருத்தைச் சுருக்கமாக எழுதுங்கள்.*

**பாடச்சுருக்கம்:** *மெய்ப்பக்தி என்பது வெளிப்புற நடத்தையைச் சார்ந்ததல்ல; இருதயத்தின் நிலையைச் சார்ந்தது. ஒருவரின் இருதயம் தேவனிடம் சரணடையும்போது, அவர் விசுவாசத்தில் வளரவளர, அவருடைய வாழ்க்கையில் கிறிஸ்துவின் குணம் அதிகதிகமாக வெளிப்படுகிறது. இருதயத்தை கிறிஸ்துவானவர் மென்மையாக்க வேண்டும்; மற்றதெல்லாம் தானாகவே நடைபெறும்.*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்

## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,
டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,
15680 கிலோ ஹெர்ட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

## ஓய்வுநாட்பள்ளிப் பாடங்கள்

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

**YOUTUBE** க்குப் போய்,

## Mogappair SDA Tamil Sabbath School Lesson

என்று டைப் பண்ணினால் பாடங்கள் வரும்.
அந்த வாரத்துக்குரிய பாட எண்ணைத் தேடிப்பார்த்துக் கேட்கவும்.